Government of Western Australia
Mental Health Commission

### சிகிச்சை

சிபாரிசுச் செயற்பாட்டின்போது, மருந்து போன்ற மருத்துவம் உங்களுக்கு வழங்கப்படலாம் அத்துடன் அதை ஏற்றுக்கொள்வதா அல்லது மறுப்பதா என்பது உங்களது தெரிவாகும். எவ்வாறாயினும், நீங்கள் அதை மறுத்தால், அத்துடன் உங்கள் உயிரைக் காப்பாற்ற அல்லது நீங்கள் உங்கள் உடலுக்கோ அல்லது ஏனையோருக்கோ தீங்கு இழைப்பதனைத் தடுப்பதற்குச் சிகிச்சை அவசியமெனப் பணியாளர்கள் உணர்ந்தால், அத்தருணம் உங்களது சம்மதம் இல்லாமலே சிகிச்சை அளிக்கப்படலாம். இது அவசரகால மன நோய் மருத்துவம் எனப்படும்.

### சிபாரிசு செய்யப்படும்போது உங்களது உரிமைகள்

- உங்கள் உரிமைகள் பற்றி தகவல் பெறவும், உங்கள் கேள்விகளுக்குப் பதில் கிடைக்கவும் அத்துடன் உங்களுக்கு வழங்கப்பட்ட எந்தவொரு சிகிச்சை குறித்தும் முழுமையான தகவலளிக்கப்படவும் தங்களுக்கு உரிமை உண்டு.
- நீங்கள் தடுத்து வைக்கப்பட்டால், உங்கள் பராமரிப்பாளர், குடும்ப உறுப்பினர் உட்பட மக்களுடன் தொடர்பு கொள்ளக்கூடிய உரிமை உங்களுக்குண்டு.
- இரகசியம் மற்றும் அந்தரங்கத்தைப் பேணும் உரிமை உங்களுக்குண்டு.
- 'உள நல ஆதரவு சேவை' யிலிருந்து உதவி கோர உங்களுக்கு உரிமையுண்டு. இது ஓர் இலவச மற்றும் சுயாதீன சேவையாகும். (தொ.பே: 1800 999 057).
- ஏதாவது ஒன்று பற்றி உங்களுக்கு அதிருப்தி ஏற்படின், உள நல சேவைக்கு முறையிட உங்களுக்கு உரிமையுண்டு. சுகாதார மற்றும் இயலாமை சேவைகள் முறைப்பாடுகள் அலுவலகத்திற்கும் நீங்கள் புகார் செய்யலாம் (HaDSCO) (தொ: 1800 813 583).

### மேலும் தகவல்கள்

இந்தப் பிரசுரத்திலுள்ள தகவல்கள் , உள நல சட்டம் 2014 (*Mental Health Act 2014*) இல் வெளியிடப்பட்ட சட்டங்களுடன் தொடர்புடையவை. பின்வரும் ஒரு தொகுதி துண்டுப் பிரசுரங்களில் இந்தச் சட்டத்தைப் பற்றிய தகவல்கள் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது:

- பரிசோதனை ஒன்றிற்காக மனநோய் வைத்தியருக்குச் சிபாரிசு செய்தல்
- தங்கிச் சிகிச்சைபெறும் நோயாளருக்கான வழிமுறைகள்.
- சமூகச் சிகிச்சை வழிமுறைகள்
- தானாக விரும்பி வரும் நோயாளருக்கான தகவல்கள்
- மன வருத்தத்திற்கான மருத்துவத்தைப் பெறுதல்
- தனிப்பட்ட உதவியாளர்களுக்கான தகவல்கள்
- நியமிக்கப்பட்டவர்கள்: நியமனம் செய்வது எவ்வாறு அத்துடன் அதன் அர்த்தம் என்ன.

### ஏனைய பிரசுரங்கள் கிடைக்குமிடம்:

- உள நல நியாய மன்று
- உள நல ஆதரவு சேவை
- உள நல சட்ட நிலையம்

உளநல சட்டம் 2014 பற்றி அதிக தகவல்களுக்கும், ஏனைய வழி வகைகளுக்கும் வருகை தரவும், மன நல ஆணைய இணையத்தளம்: www.wa.gov.au or phone (08) 6272 1200

This document can be made available in other languages and alternative formats on request.

Published by the Mental Health Commission (2015)

# ஒரு பரிசோதனைக்காக மனநோய்மருத்துவருக்குச் சிபாரிசு செய்தல்



**படிவம் 1ஏ சிபாரிசு என்பது, உளநலச் சட்டம் 2014 இன் கீழ் ஒரு மனநோய் மருத்துவரால் நீங்கள் பரிசோதனை செய்யப்படும் ஒரு விதிமுறையாகும்.**

**நீங்கள் ஒரு படிவம் 1 ஏ சிபாரிசில் இருப்பின், உங்களது உரிமைகள் என்ன மற்றும் நீங்கள் எதனை எதிர்பார்க்கமுடியும் என்பது பற்றிய தகவல்களை இந்தப் பிரசுரம் தருகிறது.**

ஒரு சிறப்பு வைத்தியருடன் கலந்தாலோசிப்பதற்காக ஒரு பொது வைத்தியர் ஏற்பாடு செய்யும் ஒரு சாதாரண சிபாரிசிலிருந்து ஒரு **1 ஏ படிவ** சிபாரிசு வேறுபட்டதாகும். நீங்கள் ஒரு மனநோய் மருத்துவரைக்கொண்டு ஒரு பரிசோதனையைச் செய்துகொள்வதற்குப் படிவம் 1 ஏ சிபாரிசு ஆனது உளநலச் சட்டம் 2014 இன் கீழான ஒரு விதிமுறையாகும்.

இது ஏனென்றால், நீங்கள் படிவம் 1ஏ சிபாரில் இருப்பின், ஒரு வைத்தியர் அல்லது ‘அதிகாரம் பெற்ற உள நல மருத்துவர்’ என அழைக்கப்படும் ஓர் உயர் தகைமைபெற்ற உளநல மருத்துவர் உங்களை மதிப்பீடு செய்து, ஆராய்ந்து பார்த்ததில் உங்களுக்குக் கட்டாயமாக மனநோய் மருத்துவம் தேவைப்படலாமெனத் தீர்மானிக்கலாம். உங்களுக்குக் கட்டாயமாக மனநோய் மருத்துவம் தேவைப்படுமாவென ஒரு மனநோய் மருத்துவர் மட்டுமே தீர்மானிக்கலாம். எனவே உங்களைப் பரிசோதிக்க  ஒரு மன நோய் மருத்துவருக்குச் சிபாரிசு செய்வதற்காக அந்த வைத்தியர்/மருத்துவர் ஒரு 1ஏ படிவத்தைப் பூர்த்திசெய்துள்ளார்.

## அந்தச் சிபாரிசு எதைக் கருதும்?

படிவம் 1ஏ சிபாரிசு 3 நாட்களுக்குச் செல்லுபடியாகும்.  தலை நகரமல்லாத பிரதேசங்களில் இது 6 நாட்களுக்கு நீடிக்கப்படலாம்.

குறிப்பிடப்பட்ட இடத்திலுள்ள ஒரு மனநோய் மருத்துவரால் பரிசோதிக்கப்படுவதற்காக நீங்கள் போக வேண்டும் என்பதே படிவம் 1ஏ சிபாரிசில் நீங்கள் இருக்கிறீர்கள் என்பதன் பொருளாகும். தேவை ஏற்படின், பரிசோதிக்கும்இடத்திற்கு நீங்கள் போவதனை நிச்சயப்படுத்துவதற்காக அந்த வைத்தியர்/மருத்துவர் உங்களைத் தடுத்து வைக்கலாம். உங்களைப் பரிசோதனைக்குக் கூட்டிச்செல்வதற்குப் பாதுகாப்புக்கான மாற்று நடவடிக்கைகள் இல்லாத பட்சத்தில் அவர் ஒரு போக்குவரத்து உத்தியோகத்தரை அல்லது ஒரு காவல் அலுவலரையும் ஒழுங்குபடுத்தலாம்.

பரிசோதிக்கும் இடத்தை நீங்கள் சென்றடைந்ததும், ஒரு மனநோய் மருத்துவர் உங்களைப் பரிசோதிக்கும் வரை நீங்கள் வெளியேற முடியாது,(நீங்கள் 24 மணித்தியாலங்களுக்கு மேலாகத் தாமதிக்காவிட்டால், அவ்வேளையில் நீங்கள் விட்டுச்செல்லலாம்).

## ஒரு மனநோய் மருத்துவரின் பரிசோதனை

உங்களுடன் உரையாடியும், கேள்விகள் கேட்டும் மனநோய் மருத்துவர் உங்களைப் பரிசோதனை செய்வார். தேவை ஏற்படின், ஒரு உரைபெயர்ப்பாளர் உபயோகப்படுத்தப்படுவார்.  சில நாட்டுப்புறங்களில், ஒளிப்படத் தொடர்பு மூலம் பரிசோதனை மேற்கொள்ளப்படலாம்.

நீங்கள் ஓர் ஆதிவாசி அல்லது ‘ரொறெஸ்’ நீரிணை தீவைச் சேர்ந்தவரானால்,  ஆதிவாசி அல்லது ‘ரொறெஸ்’ நீரிணை தீவைச்சேர்ந்த உளநல சேவையாளருடன் அல்லது அவருடன், உங்கள் சமூகத்தில் முக்கியத்துவம் வாய்ந்த உறுப்பினர் ஒருவரினதும்  உதவியுடன் இந்தப் பரிசோதனை நடாத்தப்படலாம்.

பரிசோதிக்கையில், கட்டாய சிகிச்சை தேவைப்படுமா என்பதனைத் தீர்மானிப்பதற்காகப் பின்வரும் காரணிகளை மனநோய் மருத்துவர் ஆராய்வார்:

- சிகிச்சை தேவைப்படுமளவு  உளவருத்தம் உங்களுக்கு உண்டா?
- நீங்கள் சிகிச்சை பெறாவிட்டால் உங்களுக்கோ அல்லது இன்னொருவருக்கோ குறிப்பிடக்கூடியளவு அபாயம் உண்டா?
- சிகிச்சை பற்றி ஒரு தீர்மானம் எடுக்க நல்ல போதியளவு திறமை உண்டா?
- கட்டாய சிகிச்சை இல்லாமல், சிகிச்சையளிப்பதற்கான குறைந்தளவு மட்டுப்படுத்தப்பட்ட வழி ஏதும் உண்டா?

## மனநோய் மருத்துவர் எடுக்கும் முடிவுகள்

உங்களுடன் கலந்துரையாடி, காரணிகளை ஆராய்ந்தபின், பின்வரும் முடிவுகளில் ஒன்றினை மனநோய் மருத்துவர் மேற்கொள்வார்:

- நீங்கள் கட்டாயத்தின் பேரில் இருக்கும் நோயாளியாக இல்லாமல், விட்டுச்செல்ல  நீங்கள் அனுமதிக்கப்பட வேண்டும். (ஒருவேளை சுய விருப்பு நோயாளியாகச் சிகிச்சை பெற நீங்கள் ஒத்துக்கொள்ளக் கூடும்.  ந்
- நீங்கள் கட்டாயத்தின் பேரில் நோயாளியாகவும் அத்துடன் வைத்தியசாலையில் சிகிச்சையும் பெற வேண்டும். வைத்தியசாலயிலிருந்து சிகிச்சைபெறும் விதிமுறைகளை மனநோய் மருத்துவர் உருவாக்குவார் (படிவம் 6ஏ அல்லது 6 பி) அத்துடன் நீங்கள் வைத்தியசாலையில் சேர்த்துக்கொள்ளப்படுவீர்கள்.
- தூண்டுதலால் வரும் நோயாளராக நீங்கள் இருக்கவேண்டும் ஆனால், நீங்கள் வைத்தியசாலையில் தங்கி இருக்கத்தேவையில்லை, உங்களைச் சமுதாயத்தில் வைத்தே சிகிச்சை செய்யலாம். மன நோய் மருத்துவர் ஒரு சமுதாய சிகிச்சை விதிமுறையை (படிவம் 5 ஏ) மேற்கொள்வார். அத்துடன் உங்களது முதல்தடவை முன்பதிவுக்கான இடம், நேரம் பற்றி உங்களுக்கு அறிவிக்கப்படும்.

தூண்டுதலால் வரும் நோயாளர்களைச் சேர்த்துக்கொள்ளும் வைத்தியசாலையில் சோதனை இடம்பெற்றால் (கிளினிக் அல்லது ED க்குப் பதிலாக), நீங்கள் வைத்தியசாலைக்கு வந்ததிலிருந்து 72 மணித்தியாலங்களுக்கு மேற்படி எந்தவித முடிவுகளையும் எடுக்காமல் ஒரு மன நோய் மருத்துவர் பின்போட முடியும் ஆதலால், மேலும் ஒரு பரிசோதனை இடம்பெறலாம்.

மனநோய் மருத்துவர் எடுக்கும் எவ்விதமான முடிவும், உங்கள் பராமரிப்பாளர், நெருங்கிய குடும்ப அங்கத்தவர் அல்லது ஏனைய தனிப்பட்ட உதவியாளருக்கு அறியத்தரப்படும்.

